கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

தமிழ்நாட்டில் மீண்டும் ஆட்சியமைக்கிறது தி.மு.க.!

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக்கணிப்பில் தகவல்!

சென்னை, மே 01–

2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்கள் நடத்திய தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்பில், தி.மு.க. மீண்டும் ஆட்சியமைக்கும் என நேற்று முன்தினம் (29.4.2026) மாலை வெளியிட்ட அறிவிப்பில் உறுதிபடத் தெரிவித்துள்ளன.

அக்னி நியூஸ் சர்வீசஸ்	மின்னம்பலம்	Chanakya Strategy
திமுக+ : 169	திமுக+ : 155	திமுக+ : 145–160
அதிமுக+ : 64	அதிமுக+ : 72	அதிமுக+ : 50 – 65
NDTV :	**ஏபிபி நாடு**	**பீப்பிள்ஸ் இன்சைட்**
திமுக+ : 125–145	திமுக+ : 148–168	திமுக+ : 120–140
அதிமுக+ : 65 – 80	அதிமுக+ : 61 – 81	அதிமுக+ : 60 – 70
ரிபப்ளிக் – பி மார்க்	**பீப்பிள்ஸ் பல்ஸ்**	**சாவியா ரிசர்ச்**
திமுக+ : 125–145	திமுக+ : 125–145	திமுக+ : 118–130
அதிமுக+ : 65 – 85	அதிமுக+ : 65 – 80	அதிமுக+ : 59 – 75

இவ்வாறு கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன.

மே தினம் : நினைவுச் சின்னத்தில் கழகத் தலைவர்

முதல்வர் மு.க.ஸ்டாலின் மலரஞ்சலி செலுத்துகிறார்!

தொ.மு.ச. பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!

சென்னை, மே 01 –

உலக உழைப்பாளிகளின் திருநாளாம் மே தினத்தையொட்டி இன்று (01.05.2026) காலை 7.30 மணியளவில் சென்னை சிந்தாதிரிப்பேட்டை மேதினப் பூங்காவில் அமைந்துள்ள மேதின நினைவுச் சின்னத்திற்கு கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், தி.மு.கழக நிர்வாகிகளும் மலரஞ்சலி செலுத்திட வருகை தர உள்ளார்கள்.

எனவே தொ.மு.ச. பேரவை இணைப்புச் சங்க நிர்வாகிகள், தொழிலாளர்கள் கருப்பு - சிவப்பு சீருடை அணிந்து பேரவை கொடியுடன் வருகை தந்திட வேண்டுமாய் தொ.மு.ச. பேரவை சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இடம் :கலைஞரகம்
நாள் : 29.04.2026

மு.சண்முகம்
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியில் சாதனை!

இந்தியாவை மட்டுமல்ல; இனி தெற்காசியாவையே தமிழ்நாடு வழிநடத்தும்!

'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் முதல்வருக்குப் பாராட்டு!

சென்னை, மே 1 -

தமிழ்நாடு நடப்பு நிதியாண்டில் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியில் 10.83 சதவிகிதம் என்ற சாதனையை பதிவு செய்துள்ளது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவை மட்டுமல்ல; இனி தெற்காசியாவையே தமிழ்நாடு வழிநடத்தும் என கூறியுள்ளதாக 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளாக மிகச்சிறப்பான முன்னேற்றத்தை கண்டு வரும் நிலையில், தற்போது வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் மாநிலத்தின்பொருளாதார வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. 2025-2026ம் நிதியாண்டில் தமிழகம் 10.83% என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த தேசிய சராசரி வளர்ச்சி விகிதமான 7.4 சதவீதத்தை ஒப்பிடுகையில், தமிழகத்தின் இந்த வளர்ச்சி விகிதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக உள்ளது. இது தேசிய சராசரியைவிட சுமார் 3.4% அதிகம் ஆகும்.

கடந்த 2024-2025ம் நிதியாண்டில் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி 11.19 சதவீதமாக இருந்தது. தற்போது, 2025-2026ம் நிதியாண்டிலும் 10.83% வளர்ச்சியை எட்டியிருப்பதன் மூலம், தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக தமிழகம் இரட்டை இலக்க வளர்ச்சியை பதிவுசெய்து வரலாற்று சாதனை படைத்துள்ளது. ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் இதை வெளியிட்டுள்ளது. 2025-2026ம் நிதியாண்டில் இந்தியாவிலேயே மிக உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்த மாநிலமாக தமிழ்நாடு உள்ளது.

தினகரன்
ஏப்ரல் 30, 2026 வியாழக்கிழமை

தட்டி தூக்கும் தமிழ்நாடு...!

தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளாக மிகச்சிறப்பான முன்னேற்றத்தை கண்டு வரும் நிலையில், தற்போது வெளியாகியுள்ள புள்ளிவிவரங்கள் மாநிலத்தின் பொருளாதார வலிமையை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. 2025-26ம் நிதியாண்டில் தமிழகம் 10.83% என்ற இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. இந்தியாவின் ஒட்டுமொத்த தேசிய சராசரி வளர்ச்சி விகிதமான 7.4 சதவீதத்தை ஒப்பிடுகையில், தமிழகத்தின் இந்த வளர்ச்சி விகிதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக உள்ளது. இது தேசிய சராசரியைவிட சுமார் 3.4% அதிகம் ஆகும்.

தமிழகத்தின் இந்த அதிரடி வளர்ச்சிக்கு தொழில்துறை, சேவை துறை மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகிய மூன்றில் ஏற்பட்ட முன்னேற்றமே முக்கிய காரணம். உலகளாவிய முதலீட்டாளர்கள் மாநாடுகள் மற்றும் மாநில அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் ஈர்க்கப்பட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) உற்பத்தி துறையை வலுப்படுத்தியுள்ளன. ஓசூர் மற்றும் சென்னை பகுதிகளில் மின்சார வாகனங்கள் மற்றும் மின்னணு உதிரிபாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களின் விரிவாக்கம் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தை 2030ம் ஆண்டுக்குள் 'ஒரு டிரில்லியன் டாலர்' பொருளாதாரமாக மாற்றும் இலக்கை எட்டுவதற்கு ஆண்டு தோறும் 10 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சி விகிதம் அவசியமானது. இரட்டை இலக்க வளர்ச்சி முடிவுகள், தமிழ்நாடு அரசு சரியான பாதையில் பயணிப்பதை உறுதிப்படுத்துகிறது.

இந்த வளர்ச்சி விகிதம் வரும் ஆண்டுகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும், தனி நபர் வருமானத்தை அதிகரிப்பதிலும் பெரும் பங்காற்றும்.

குறிப்பாக, இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி, சென்னையை மட்டுமே நம்பியிருந்த நிலையை மாற்றி, மாநிலம் தழுவிய சமமான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. தேசிய அளவில் நிலவும் பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும், தமிழ்நாடு காட்டியுள்ள இந்த துரித வளர்ச்சி, மற்ற மாநிலங்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமைந்துள்ளது. ஒன்றிய அமைச்சகத்தின் முழுமையான தரவுகள் வெளியான பிறகு, தேசிய பொருளாதார வரைபடத்தில் தமிழகத்தின் இடம் இன்னும் துல்லியமாக தெரிய வரும்.

இதுபற்றி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "நாங்கள் மூன்று ஆண்டுகள் அடித்தளம் அமைத்து, தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இரட்டை இலக்க வளர்ச்சியை வழங்கினோம். தமிழக மக்களே இந்த முன்னேற்றத்திற்கு காரணம். உங்கள் துணையோடு இன்னும் பல உயரங்களை அடைவது உறுதி. இது வெறும் தொடக்கம்தான். உங்கள் ஆதரவுடன், இந்த வளர்ச்சி மேலும் வேகமெடுக்கும். இந்தியாவை மட்டுமல்ல, இனி தெற்காசியாவை தமிழ்நாடு வழிநடத்தும்" என்று தனது சமூக வலைதள பதிவில் தெரிவித்துள்ளார். சபாஷ் தமிழ்நாடு.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விடுமுறை!

மே-1, தொழிலாளர் தினத்தை முன்னிட்டு 'முரசொலி' அலுவலகத்திற்கு இன்று **(1.5.2026 - வெள்ளிக்கிழமை)** விடுமுறை!

'முரசொலி'யின் அடுத்த இதழ், வழக்கம்போல் **(3.5.2026 ஞாயிற்றுக்கிழமை)** அன்று வெளி வரும்.

-ஆ.ர்.

மக்கள் மன்றத்தில் வீழ்த்த முடியாதவர்கள் நீதிமன்றத்துக்குச் செல்கிறார்கள்!

மின்மாற்றிக் கொள்முதலில் - அரசுக்கு ஒரு ரூபாய் கூட இழப்பு ஏற்படவில்லை!

வி.செந்தில்பாலாஜி – செய்தியாளர்களிடம் விளக்கம்!

கோவை, மே 01-

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்மாற்றிகள் கொள்முதல் செய்வதில் இழப்பில்லை. பொது வெளியில் மக்கள் மன்றத்தில் வீழ்த்த முடியாதவர்கள் நீதிமன்றத்திற்கு போகிறார்கள் என்று கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறினார்.

இது குறித்து அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின்மாற்றிகள் கொள்முதல் செய்வதில் தவறுகள் நடந்திருக்கிறது என்று ஒரு அமைப்பு புகார் தெரிவித்து நீதிமன்றத்திலும் அது குறித்து வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கினுடைய தீர்ப்பில் இன்று உயர்நீதிமன்றம் சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவுகளை பிறப்பித்திருக்கின்றார்கள். அது குறித்து சில விளக்கங்களை அளிப்பது என்னுடைய கடமையாக கருதி உங்களை அனைவரையும் இந்த நேரத்தில் நான் சந்தித்திருக்கின்றேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தை பொறுத்தவரைக்கும் மின்மாற்றிகள் கொள்முதல் என்பது 1987 ஆம் ஆண்டு தொடங்கி அன்றைய நடைமுறைகள் என்ன பின்பற்றப்பட்டதோ அதே நடைமுறைதான் இன்று வரை தொடர்ந்து பின்பற்றப்பட்டு வருகின்றன.

ஒரு டெண்டர் கோட் பண்ணும் போது 20 பேர், 30 பேர் அந்த டெண்டர்ல கலந்துக்குவாங்க. சில பேரு எல்1 பிரைஸை கோட் பண்ணுவாங்க. ஒரே மாதிரியான பிரைஸ் இருக்கும். சில பேர் எல்2 பிரைஸ் ஒரே மாதிரியா இருக்கும். சில பேர் எல்3 ஒரே மாதிரியான ரேட்டை கோட் பண்ணியிருப்பாங்க. அந்த வகையில பார்த்தா 1987-லேயே கூட ஒரு டெண்டர்ல ரெண்டு பேர் எல்1 இல் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. அதே 87-இல் திரும்ப 3 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. அதுக்கு அடுத்து பார்த்தீங்கன்னா நீங்க வரிசையா 2006-ல் எல்1 ஒருத்தர்னா, எல்2 23 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. எல்3 அன்னைக்கு 18 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. 2011-12- ம் ஆண்டு எடுத்தீங்கன்னா 29 நபர்கள் டெண்டர்ல கலந்துகிட்டதுல எல்3 பார்த்தீங்கன்னா 17 பேர் ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. இப்படி 2011, 2012- இல் ஆரம்பிச்சு 2013, 2014 அதே மாதிரி வரிசையா இப்ப வரைக்கும் கிட்டத்தட்ட 30 டெண்டருக்கு மேல போடப்பட்டதுல வந்து பார்த்தீங்கன்னா 2016, 2017-இல் 17 பேர் ஒரு டெண்டர்ல கலந்துக்குறாங்க. அதுல நாலு பேர் ஒரே பிரைஸை கோட் பண்றாங்க. 11 பேர் எல்2- ல் ஒரே பிரைஸ் கோட் பண்றாங்க. அதே 2016, 2017-ல் எல்1 இல் ஒருத்தர் , எல்2 வில் 18 பேர், எல்3 இல் 6 பேர். அதே 2016, 2017-இல் 21 பேர் கலந்து கிட்ட டெண்டர்ல எல்1 இல் ஒருத்தர், எல்2 இல் ஒருத்தர், எல்3 இல் 17 பேர். அதே 2016, 2017-இல் எல்1 இல் ஒருத்தர், எல்2 இல் ஒருத்தர், எல்3 இல் 31 பேர். இன்னொரு 2016, 2017 டெண்டர்ல எல்1 இல் 5 பேர், எல்2 இல் 29 பேர், 2017, 2018-இல் 28 பேர் கலந்து கொண்டதில் எல்1 இல் 5 பேர், எல்2 இல் 6 பேர், எல்3 இல் ஒருத்தர். 2019, 2020-இல் எல்1 12 பேர், எல்2 ஒருத்தர், எல்3 20 பேர். அதே 2019, 2020-இல் 11 பேர் எல்1, ஒருத்தர் எல்2, 6 பேர் எல்3. இன்னொரு 19, 20 டெண்டர்ல 12 பேர் எல்1. ஒரே பிரைஸை கோட் பண்ணது 12 பேர், எல்2 ஒருத்தர், எல்3 வந்து நாலு, 20, 21-ல வந்து 33 பேர் கலந்துக்குறாங்க. 11 பேர் எல்1 பிரைஸை மேட்ச் பண்ணி கோட் பண்ணியிருக்காங்க, 15 பேர் எல்2 ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. எல்3 ஒருத்தர். இப்படி முறையா வந்து டெண்டர் போடும்போது வந்து ஒருத்தர் ஒரு கலந்துகிறவங்க 30 பேர், 35 பேர், 40 பேர் இருக்கும்போது குறிப்பிட்ட சிலர் வந்து எல்1 பிரைஸ்க்கு மேட்ச் ஆகுற மாதிரி இருக்கும். சில பேர் வந்து எல்2 பிரைஸ் கோட் பண்ணியிருப்பாங்க. சில பேர் எல்3 பிரைஸை கோட் பண்ணியிருப்பாங்க. பொதுவா டான்ஜெட்கோ பொறுத்தவரைக்கும் என்னன்னா எல்1 பிரைஸை யார் மேட்ச் பண்ணி கொடுக்குறாங்களோ அவங்களுக்கு அந்த டெண்டரை பிரிச்சு கொடுப்பாங்க.

ஒருத்தரே சப்ளை பண்ண முடியாது அப்படிங்கறதுனால இது 1987-ல இருந்து இருக்கக்கூடிய நடைமுறை. அதை வந்து எல்1-ஐ மேட்ச் பண்ணி கொடுக்குறவங்களுக்கு எவ்வளவு நமக்கு டிமாண்ட் இருக்கோ அதுக்கு தகுந்த மாதிரி அவங்களுக்கு பிரிச்சு ஓர்க் ஆர்டர் கொடுப்பாங்க. இதுதான் இதுவரை இருக்கக்கூடிய நடைமுறைகள். இந்த நடைமுறைகள்தான் டான்ஜெட்கோ வந்து தொடர்ந்து பின்பற்றி வருது. இது இல்லாம இந்த டெண்டரை வந்து ஸ்க்ரூட்டினி கமிட்டி ஒன்னு இருக்கு. அதுக்கப்புறம் போர்டு கமிட்டி ஒன்னு இருக்கு. மூணு கமிட்டி இருக்கு இதுல. இந்த டெண்டரை ஃபைனல் பண்றதுக்கு சீனியர் ஆபீசர்ஸ் இருக்கக்கூடிய மூணு கமிட்டிகள் தான் இந்த டெண்டரை வந்து ஃபைனல் பண்ணி இந்த ஆர்டர் கொடுக்கலாமா வேண்டாமான்னு முடிவெடுக்குறது. அதிகாரிகள் சார்ந்த அந்த குழு மூணு குழுக்கள்தான் ஒண்ணு ஒண்ணா ஃபைனல் பண்ணி ஃபைனல் பண்ணி இதுக்கான உத்தரவுகளை நீதிமன்றத்தினுடைய முழு உத்தரவும் இன்னும் வரல. அந்த ஆர்டர் கிடைச்சதுக்கு அப்புறம்தான் அதுக்குள்ள என்னென்னலாம் சொல்லியிருக்காங்கன்னு தெரியும். கடைசி பேரா மட்டும் வாசித்திருக்காங்க. அதனால அந்த கடைசி பேரா வாசித்து நாளைக்கு ஆர்டர் வரரெண்டு நாள் ஆச்சுன்னா இன்னைக்கு நீங்க சிபிஐ விசாரணை மட்டும்தான் அப்படிங்கிறது மட்டும்தான் தலைப்பு செய்தியா போடுவீங்க. அதுக்காகத்தான் இந்த விளக்கங்களை கொடுக்கிறோம். முழு ஆர்டர் வந்ததுக்கு அப்புறம் நான் உங்களை சந்திக்கிறேன் நான். அப்போ அதுல என்னெல்லாம் சொல்லியிருக்காங்க என்னங்கிற கருத்தை நான் திரும்ப நான் சொல்றேன்.

நெருக்கடி!

செய்தியாளர்: உங்களுக்கு நெருக்கடியை கொடுக்குறாங்களா?

வி.செந்தில்பாலாஜி: நெருக்கடின்னு பார்க்கல. அதாவது வந்து ஒரு புகார் கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பு கூட ரொம்ப வசதியா இந்த நாலு வருஷத்துல நடந்தது மட்டும் தனியா பிரிச்சு எடுத்து இது தவறு நடந்திருக்குன்னு சொல்லக்கூடிய வங்க. இல்ல அவங்க 21-க்கு அப்புறம் எடுத்து சொல்றாங்க. ஒரு ஏழு டெண்டர்ல இந்த மாதிரி நடந்திருக்கு. ஒரே பிரைஸை கோட் பண்ணியிருக்காங்க. எப்படி அவங்க கோட் பண்ணாங்கன்னு. அதுக்கு முன்னாடி 16, 17-ல நான் இப்ப எவ்வளவு டெண்டர் சொன்னேன். 18, 19-ல சொன்னேன். 87-ல இருந்து இந்த நடைமுறை இருக்கு. அதெல்லாம் ரொம்ப வசதியா மறந்து, மறைச்சு இந்த 5 வருடத்தில் மட்டும் தவறு நடந்தது போல அந்த அமைப்பு வந்து ஒரு கட்சிக்கு ஒரு சில கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டதாகத்தான் நான் நினைக்கிறேன். அவங்க ஒரு சுயமா செயல்படல. ஒரு கட்சிக்கு ஆதரவாக செயல்பட்டு நீதிமன்றத்தில இது போன்ற ஒரு வழக்கை தாக்கல் செய்து இந்த உத்தரவுகளை பெற்றிருக்கின்றார்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

செய்தியாளர்: அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் இதெல்லாம் நடந்திருக்கா சார்?

வி.செந்தில்பாலாஜி: 87-ல இருந்தே இதே நடைமுறை தான் சார். 16, 17-ல நான் இப்ப சொன்னேன்ல சார். 16, 17-ல 1.2.3.4.5 அஞ்சு டெண்டர் இது மாதிரி இருக்கு. நிறைய டெண்டர் இது மாதிரி இருக்கு. நிறைய டெண்டர் இது மாதிரி இருக்கு. 17, 18-ல இருக்கு. 19, 20-ல இருக்கு. 20, 21-ல இருக்கு. ஒவ்வொரு வருஷமும் ஒரு 30 பேர், 40 பேர் இந்த டெண்டர்ல கலந்துக்குவாங்க. ஒரு ஐந்து ஆறு பேர் அல்லது ஒரு 10 பேர் எல்1 பிரைஸ்க்கு ஒரே மாதிரியான பிரைஸை கோட் பண்ணியிருப்பாங்க. சில பேர் எல்2 பிரைஸ் ஒரே மாதிரியான பிரைஸ் இருக்கும்.

அது அந்த அமைப்பைத்தான் கேட்கணும். அவங்க தாக்கல் பண்ணதுல அந்த அஞ்சு வருஷம் மட்டும் இருக்கு. அந்த அமைப்பு தாக்கல் பண்ணதுல உறுதியா இருக்கும். இல்லாம எப்படி இருக்கும்? இல்லாம எப்படி இருக்கும்? அந்த அமைப்பு வந்து இப்ப பேசக்கூடியவங்க போன ஆட்சியைப் பத்தி எதுவுமே பேசுறது இல்லையே. எங்க அரசாங்கத்தைப் பற்றி மட்டும்தானே பேசிட்டு இருக்காங்க. எங்க அரசாங்கத்தின் மேல மட்டும்தானே புகார் சொல்லக்கூடிய கருத்துக்களை முன்வைக்கிறாங்க. அதுக்கப்புறம் இடையில எதுவும் பேசலையே சார். அது சம்பந்தமா தொடர்ச்சியா ஏதாவது வழக்கு தாக்கல் பண்ணாங்களான்னு. அதோட அதை முடிச்சுக்கிட்டாங்க. அதெல்லாம் கடந்த காலங்கள்ல. அதுக்கு பிறகு இந்த இடையில அஞ்சு வருஷத்துல அந்த வழக்கை பற்றி அவங்க எதுவுமே பேசினது இல்லையே. அந்த வழக்கை அவங்க தொடர்ந்து நடத்தவும் இல்லையே. எடப்பாடி பழனிசாமி வந்து சிபிஐ உத்தரவு போட்டப்ப வந்து டெல்லியில போய் ஸ்டே வாங்கினாரு. அதுல கூட அவங்க சேர்ந்து தாக்கல் பண்ணியிருக்கலாம் அந்த கேஸ்ல. அந்த மாதிரி எல்லாம் அவங்க எதுவும் போகலை. அதுக்காக சொல்றேன்

செய்தியாளர்: நீங்க பதில் எதுவும் அப்பீல் போறீங்களா?

வி.செந்தில்பாலாஜி: நான். இது சம்பந்தமா இன்னைக்கு வழக்கறிஞர்கிட்ட பேசி அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை பொறுத்திருந்து அதை தொடர்ந்து பேச ஆரம்பிப்போம்.

செய்தியாளர்: தொடர்ந்து இந்த மாதிரி குற்றச்சாட்டு உங்க மேல வைக்கிறாங்க அத நீங்க எப்படி பாக்குறீங்க?

வி.செந்தில்பாலாஜி: அதாவது பொதுவெளியில் மக்கள் மன்றத்தில் வீழ்த்த முடியாதவர்கள் நீதிமன்றத்திற்கு போறாங்க. அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் ஒருவர் குற்றவாளி என்பதைப் போல ஒரு தோற்றத்தை உருவாக்க முயற்சி பண்றாங்க. அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டவுடன் அதிமுக இருக்கட்டும், பிஜேபி இருக்கட்டும் அவங்களுடைய நிர்வாகிகளா இருக்கட்டும் சமூக வலைத்தளத்திலயும் சில அவங்களுடைய பேட்டிகளிலும் பார்க்கும்போது ஏதோ குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதை போல அவங்களுடைய கருத்துக்களை பொதுவெளியில உங்ககிட்ட கூட செய்தியாளர் சந்திப்பில கூட அந்த கருத்துக்களை தொடர்ந்து முன்வைக்கிறாங்க. அதுக்கு சில உதாரணங்களை இந்த தேர்தல் களத்துல நம்மளும் பார்த்தோம். ஒரு உதாரணங்கள் அதாவது வடக்கு தொகுதியில பிஜேபி-ல போட்டியிட்ட அந்த வேட்பாளர் வந்து தெற்கிலிருந்து அவங்க வடக்குக்கு போனாங்க. என்னைப் பற்றி சில கருத்துக்கள் எல்லாம் அதுல பேசியிருந்தாங்க. அதுல ரொம்ப கடுமையான வார்த்தைகள் எல்லாம் பயன்படுத்தி இருந்தாங்க.

ஒரே ஒரு கேள்வி அவங்ககிட்ட நான் கேட்கணும் இப்ப நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தது. அந்த நாடாளுமன்றத் தேர்தல்ல பிரதமரும், உள்துறை அமைச்சரும் எடப்பாடியைப் பற்றி பேசினதை ஒரு தடவை அவங்க போட்டுப் பார்த்துட்டு அவங்க பதில் சொல்லட்டும். அந்த அ.தி.மு.க. அரசாங்கத்தைப் பற்றி அரசாங்கம் ஆட்சியில் இருக்கும் போது கூட உள்துறை அமைச்சரும், பிரதமரும் என்ன வந்து அ.தி.மு.கவைப் பற்றி ஊழல் அரசாங்கம் எப்படிப்பட்ட அரசாங்கம்ங்கிறதெல்லாம் அவங்க எல்லாம் சொன்னாங்க. அதெல்லாம் வந்து அவங்களுக்கு தெரியும். அதெல்லாம் ஒரு முறை திரும்ப ஒரு முறை போட்டுப் பார்த்துட்டு மறந்திருப்பாங்க. ஏன்னா அவங்களுக்கு கொஞ்சம் மறந்ததுனால இதெல்லாம் ஞாபகம் இருந்திருக்காது. இப்ப நான் ஞாபகப்படுத்துறேன்.

ஒரு முறை அவங்க வந்து இதெல்லாம் போட்டுப் பார்த்துட்டு பிரதமர் என்ன பேசினார் எடப்பாடியைப் பற்றி, அரசாங்கத்தைப் பற்றி, உள்துறை அமைச்சர் என்ன பேசினாங்க தேர்தல்ல? என்ன கருத்துக்கள் எல்லாம் முன்வைச்சாங்கன்னு பார்த்துட்டு அதுக்கப்புறம் மற்ற அரசியல் எங்களைப் பற்றி பேசினாங்கன்னா நியாயமா இருக்கும். மக்கள்ட்ட போய் சந்திச்சு, வாக்குகளை கேட்டு வெற்றி பெற முடியாதவங்க தனிப்பட்ட முறையில தாக்குதல் காழ்ப்புணர்ச்சி, விமர்சனங்கள் என்பது ஏதோ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட உடனேயே தீர்ப்பு வந்ததைப் போல, தண்டனை வழங்கப்பட்டதைப் போல ஒரு கருத்தை முன்வைக்கிறதுதான் என்னை பொறுத்தவரைக்கும் ஏற்புடையதில்லை. இப்படி பார்த்தா நிறைய அரசியல் தலைவர்கள் மேல நிறைய அரசியல்வாதிகள் மேல கேஸ் இருக்கு. அது தீர்ப்பு வரணும். இப்ப டெல்லி வந்து முதலமைச்சர் கெஜ்ரிவால் மேல கேஸ் போட்டாங்களே என்ன ஆச்சு? அந்த வழக்கு என்ன ஆச்சு?

ஒரு வழக்கினுடைய இறுதி தீர்ப்பு வருவதற்கு முன்பாகவே வந்து அ.தி.மு.க. பிஜேபி எல்லாம் வந்து அவங்க மேல இருக்கிற கேஸ் எல்லாம் விட்டுருவாங்க. மற்றவங்க மேல இருக்கிற கேஸ் மட்டும் வச்சு எடுத்துக்குவாங்க.

பொறுத்திருந்து பார்ப்போம்.

ஏற்கனவே இருந்த நடைமுறை!

இன்றைய பத்திரிகையாளர் சந்திப்பை பொறுத்தவரைக்கும் இந்த சிபிஐ விசாரணை உடைய உத்தரவு குறித்து உங்களுக்கு சில விளக்கங்களை கொடுப்பதற்காகத்தான் நாம் சந்தித்திருக்கின்றோம். இந்த உரிய விளக்கங்கள் என்பது ஏற்கனவே 87-ல இருந்து நடைமுறை பின்பற்றப்பட்ட நடைமுறைதான் இப்பொழுதும் பின்பற்றப்படுகிறது. ஆகையால் மின்சார வாரியத்திற்கோ, தமிழ்நாடு அரசுக்கோ ஒரு நயா பைசா கூட எந்தவிதமான இழப்பும் ஏற்படவில்லை. முழுக்க முழுக்க அந்த அமைப்பு என்பது அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக யாரோ தூண்டுதலின் பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள். நீதிமன்றத்தில் நிச்சயமாக இந்த வழக்கு குறித்து உரிய விளக்கங்களை கொடுத்து நாங்கள் நிரூபித்து வெளிவருவோம்.

உறுதியாக சொல்றேன், தமிழ்நாட்டில் இரண்டாவது முறையாக தளபதி அவர்கள் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்பார்கள் அது உறுதி.

எந்தவிதமான மாற்றுக்கருத்தும் இல்லை. கோவையை பொறுத்த வரை 10 தொகுதிகளும் திமுக கூட்டணி வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்போடு நாங்கள் தேர்தல் களத்தில் நின்று மிகச் சிறப்பாக தோழமை இயக்கங்களை அரவணைத்து பணியாற்றி இருக்கின்றோம். நாங்கள் எடுத்திருக்கின்ற முயற்சி 10-க்கு 10 வெற்றி என்ற இலக்கை நோக்கி நாங்கள் பயணித்திருக்கின்றோம்.

நிச்சயமாக வெற்றி பெறுவோம். மேற்கு மண்டலத்தை பொறுத்த வரை 35 தொகுதிகள் முதலமைச்சர் என்னிடத்திலே பணியாற்றக்கூடிய வாய்ப்பை தந்த தொகுதிகள் 35. 35 தொகுதியிலும் வெற்றி பெற வேண்டும் என்ற முனைப்போடுதான் நாங்கள் தேர்தல்களை முன்னெடுத்திருக்கின்றோம். நிச்சயமாக நாங்கள் வெற்றி பெறுவோம்.

எங்களுடைய நிலைப்பாட்டை நான் தெளிவா இருக்கிறேன். ஆரம்பத்துல உங்ககிட்ட சொன்னதுதான். ஐந்து ஆண்டுகாலம் முதலமைச்சருடைய சாதனைகளை மக்கள் கிட்ட சொன்னோம். அடுத்த ஐந்து ஆண்டுகளும் நிறைவேற்றக்கூடிய வாக்குறுதியை மக்கள் கிட்ட சொன்னோம். மக்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். "உதயசூரியனுக்கும் தோழமை இயக்கங்களுக்கும் வாக்களித்திருக்கின்றார்கள். நிச்சயம் வெற்றி வழங்கக்கூடிய வாக்குகளை செலுத்தியிருக்கின்றார்கள்.

இவ்வாறு வி.செந்தில்பாலாஜி செய்தியாளர்களிடம் கூறினார்.